

### அடுக்குமாடி வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த

# இரும்புக் கம்பிகள் அகற்றப்பட்டன

கோலாலம்பூர், மார்ச் 6-

வங்சா மாஜூ, செக்‌ஷன் 2இல் உள்ள அடுக்குமாடி குடியிருப்பிலுள்ள சில வீடுகளில் பொதுமக்கள் நடமாடும் பகுதிகளில் இரும்புக் கம்பிகள் அமைக்கப்பட்டிருந்ததை கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அமலாக்கப் பிரிவினர் நேற்று முன்தினம் அகற்றினர்.

தங்களின் வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள இரும்புக் கம்பிகளை அகற்றுமாறு கடந்த 10.1.2024ஆம் தேதி நோட்டீஸ் வழங்கப்பட்டும் கூட, அதனை அகற்றாமல் இருந்த சில வீடுகளிலுள்ள இரும்பிக் கம்பிகள் நேற்று முன்தினம் கட்டாயத்தின் பேரில் அகற்றப்பட்டன.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அனுமதியின்றி மக்கள் நடமாடும் பகுதிகளில் இரும்புக் கம்பிகளைப் பொருத்தியுள்ளது, 1974ஆம் ஆண்டு கால்வாய், கட்டடச் சட்டத்தின் 46ஆவது பிரிவுக்கு எதிரானது என கோலாலம்பூர் மாநகர் மன்றம் கூறியது.

வெட்டி எடுக்கப்பட்ட இரும்புக் கம்பிகள் அனைத்தும் பின்னர் ஜாலான் செராஸிலுள்ள கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டன.

இதுபோன்ற நடவடிக்கை பின்னர் தலைநகரிலுள்ள இதர அடுக்குமாடி பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் என கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று தனது பேஸ்புக்கில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறியது.